முதல்நிலை பேரூராட்சி அலுவலகம்
கல்லுக்கூட்டம்.

ந.க.எண். 267/2022/அ1 நாள் :23.06.2022

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கன்னியாகுமரி மாவட்டம், **கல்லுக்கூட்டம்** முதல் நிலை பேரூராட்சியில் 2021 –22ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தில் மின் கலம் (**Battery Operated Vehicle**) மூலம் இயங்கும் வாகனம் கொள்முதல் செய்திட தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மூடிமுத்திரையிடப்பட்ட இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி செயல்அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் **12.7.2022 ஆம்** தேதி **செவ்வாய்**கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **11.7.2022 ஆம்** தேதி **திங்கள்**கிழமை பிற்பகல் 5.00 மணி வரை அதற்குரிய தொகையை கீழ்க்கண்டுள்ள விவரப்படி **கல்லுக்கூட்டம்** பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி (வரி உட்பட) பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட இரண்டு உறைகளில் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், திறப்பு தேதி மற்றும் நேர விவரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்கவேண்டும், ஒப்பந்தப்புள்ளியுடன் பணிக்கான வைப்புத்தொகையினை **"Executive Officer., Kallukoottam Town Panchayat"** எனும் பெயரில் வங்கிவரைவோலை எடுத்து இணைத்து அனுப்பவேண்டும்.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை **12.07.2022** ஆம் தேதி செவ்வாய்கிழமை அன்று பிற்பகல் 3.30 மணிக்கு செயல்அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும்.

| வ. எ ண் | பணிகளின்விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ) | முன்வைப்புத் தொகைரூ. | ஒப்பந்தப்புள்ளிபடி வகட்டணம் | பணிமுடிக்கவேண்டி யகாலஅளவு |
|---|---|---|---|---|---|
| **(1)** | **(2)** | **(3)** | **(4)** | **(5)** | **(6)** |
| 1 | மின்கலன் (Sealed Lead Acid) – மூலம் இயங்கும் 8எண்ணிக்கை வாகனங்கள் கொள்முதல் செய்தல் | 1240000/– | 12400/– | 1560/– | 30 நாட்களுக்குள் |

## நிபந்தனைகள்

1 மின்கலன் மூலம் (Battery Operated Vehicle) இயங்கும் வாகனங்கள் கொள்முதல் செய்திட அமைக்கப்பட்ட துணைக்குழுவில் மின்கலன் (Sealed Lead Acid) மூலம் இயங்கும் வாகனத்திற்கு விவரக்குறிப்புகளின்படி (Specifications) வாகனங்கள் இருக்க வேண்டும். மேலும் மின்கலன் (Sealed Lead Acid) வாகனத்திற்கு ஒரு வண்டியின் அடிப்படை விலை ஜி.எஸ்.டி (5 சதவீதம்) நீங்கலாக ரூ.1.45 இலட்சம் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், இந்த விலைக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட வேண்டும்.

2 தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000இன்படி ஒப்பந்தப்ள்ளிகள் பரிசீலக்கப்படும்.

3 ஒப்பந்தப்புள்ளி தகுதி அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன் கொள்முதல் ஆணை வழங்கிய மூன்று தினங்களுக்குள் ரூ.50/– மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கப்படவேண்டும்.

4 மின்கலன்மூலம் (Battery Operated Vehicle) இயங்கும் வாகனங்கள் கொள்முதல் செய்தவுடன் செயற்பொறியாளரால் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு, துணைக்குழு அனுமதி வழங்கியுள்ள விவரக்குறிப்புகள் (Specifications) மற்றும் விலைவிகிதம் (Rate) அடிப்படையில் பரிசீலனை செய்து தகுதிச்சான்றிதழ் அளித்தபின்பே சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உரிய விதிமுறைகளின்படி பட்டியல் தொகை வழங்கப்படும்.

5 உரியகாலத்திற்குள் வாகனங்கள் விநியோகம் செய்ய தவறினால் செலுத்தப்பட்டிருக்கும் வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதனால் ஏற்படும் சகல இழப்புகளையும் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

6 வாகனங்கள் விநியோகம் செய்யப்பட்டு ஓராண்டு காலத்திற்கு வாகனத்தில் ஏற்படும் குறைபாடுகளை சம்மந்தப்பட்ட நிறுவனத்தாரே தனது சொந்த செலவில் சீரமைக்கும் வகையில் நிபந்தனைகள் ஒப்பந்தப்பத்திரத்தில் இடம் பெற வேண்டும்.

7 ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் ஒப்பந்தப்புள்ளிகளுடன் சென்று ஆண்டு முடிய வருமானவரி மற்றும் சரக்கு சேவைவரி செலுத்திய சான்றினை இணைத்தல் வேண்டும்.

8 ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் நிறுவனங்கள் சம்மந்தப்பட்டபணிக்கு மூன்றாண்டுகளுக்கு குறையாமல் முன்அனுபவம் உள்ளதற்கான ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்

9 ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கப்படும் போது விற்பனைவரி துறையில் பதிவு பெற்றுள்ளதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.

10 ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டது. பேரூராட்சி மன்ற ஒப்புதலுக்கு பிறகு கொள்முதல் ஆணை வழங்கப்படும். பணி ஆணை வழங்கப்படும் போதுகூடுதல் 1% வைப்புதொகை செலுத்தப்பட வேண்டும்

11 கொள்முதல் செய்யப்பட்ட வாகனங்களுக்கு பட்டியல் தொகை வழங்கப்படும் போது ஜி.எஸ்.டி 2% பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்படும்.

12 அடித்தல், திருத்தல் இன்றி முறையாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள், வைப்புத்தொகையின்றி அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நடவடிக்கை ஏதும் இன்றி தள்ளுபடி செய்யப்படும்.

13 செலுத்தப்படும் வைப்புதொகை தணிக்கை முடிந்து, தணிக்கை அறிக்கையில் தடையேதும் இல்லாதபட்சத்தில் திருப்பி வழங்கப்படும்.

14 மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மேல் உள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள்http://www.tenders.tn.gov.in/, https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பதிவிறக்கம் செய்தும் ஒப்பந்தப்புள்ளி அளிக்கலாம்.

15 இதர நிபந்தனைகள் அலுவலக வேலைநாட்களில் வேலைநேரங்களில் நேரில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

செயல்அலுவலர்,
முதல்நிலைபேரூராட்சி,
**கல்லுக்கூட்டம்**

பெறுநர் :

1 சம்மந்தப்பட்டநிறுவனங்கள்.
2 அலுவலகஅறிவிப்புபலகைக்கு.

நகல் :

1 மாவட்டஆட்சித்தலைவர், கன்னியாகுமரிமாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2 பேரூராட்சிகளின் உதவிஇயக்குநர், நாகர்கோவில் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3 உதவி செயற்பொறியாளர், நாகர்கோவில் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
4 இளநிலைபொறியாளர், **கல்லுக்கூட்டம்** பேரூராட்சி (தொகுப்பு)
5 தலைவர், **கல்லுக்கூட்டம்** பேரூராட்சி அவர்களுக்கு தகவலுக்காக.